# நீங்கள் இறுதிச் சடங்குகளுக்காக செய்த செலவுகளை நாங்கள் திருப்பித்தர வேண்டுமென்று விரும்பினால், எங்களுக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்களின் பட்டியல்

**இறுதிச் சடங்குகளுக்காக செய்த செலவுகளைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வாறு கோரிக்கை செய்வது**

1. இறந்த நபர் ஒரு செல்லத்தக்க வாரிசுதாரர் நியமனத்தைச் செய்திருக்கவில்லை என்றால், இறுதிச் சடங்குகளுக்காக செய்த செலவுகளை அவருடைய மசேநி பணத்திலிருந்து திரும்பப்பெற கோரிக்கை செய்வதற்கு பயனாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்.
2. பயனாளர் அல்லாதவர் இறந்தவரின் சொத்தில் இருந்து அத்தகைய செலவுத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு கோரிக்கை செய்யலாம். எனினும், அவர் இறுதிச் சடங்குகளுக்காகச் செலவழித்த தொகைக்குத் தொடர்புடைய சான்றாவணங்களின் நகல்களை எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டியிருக்கும்.

தயவுசெய்து நிறைவுசெய்த கணினிவழியான விண்ணப்பப் படிவத்துடன், பின்வரும் ஆவணங்களின் அச்சுநகலையும் எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

**நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய ஆவணங்கள்**

1) கோரிச்கை செய்கின்ற நபர் மற்றும் எங்களுக்கு கணினிவழியான விண்ணப்பப் படிவத்தை அனுப்பிய நபரின் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சமூகப் பாதுகாப்பு அட்டை (அமெரிக்க நாட்டவர்களுக்காக), வாக்காளர் அடையாள அட்டை (இந்திய நட்டவர்களுக்காக)

2) இறந்தவரின் (மரணமடைந்தவர்) மரணச் சான்றிதழ்

3) செலவு ஈட்டுத்தொகையைக் கோருகின்ற நபர்:
   a. இறந்தவரின் கணவர் அல்லது மனைவியாக இருந்தால் - திருமணச் சான்றிதழ்
   b. இறந்தவரின் பிள்ளையாக இருந்தால் - பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ்
   c. இறந்தவரின் பெற்றோராக இருந்தால் - இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ்
   d. இறந்தவரின் சகோதரர் அல்லது சகோதரியாக இருந்தால் - இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ், பெற்றோர்களின் திருமணச் சான்றிதழ் மற்றும் சகோதரர் அல்லது சகோதரியின் பிறப்புச் சான்றிதழ்

4) இறுதிச் சடங்கு செலவு ஈட்டுத்தொகைக்கான அசல் உறுதிமொழிப் படிவம். (தயவுசெய்து பூர்த்திசெய்த படிவத்தை அஞ்சலில் திருப்பியனுப்புங்கள். ஸ்கேன் செய்த அல்லது தொலைநகலில் அனுப்பும் பிரதியை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.)

5) மின்னணு முறையில் உங்கள் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு, உங்கள் வங்கி இருப்புக்குக் கையேடு அல்லது வங்கி அறிக்கையின் நகலை சமர்ப்பிக்க வேண்டும். வங்கி கூட்டு கணக்கு அல்லது மூன்றாம் நபரின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்துவதற்கு, பயனாளர் மற்றும் கணக்கு வைத்திருப்பவர் ஆகிய இருவரும் எங்கள் வலை தளத்தில் (https://pto.mlaw.gov.sg/deceased-cpf-estate-monies/forms/) உள்ள தகுந்த படிவம் 15 செலுத்த வேண்டும். மின்னணு அல்லாத பண பரிவர்த்தனைகளுக்கு வங்கி சேவை கட்டணம் உங்கள் கணக்கிலிருந்து கழிக்கப்படும்

6) இறுதிச் சடங்கு செலவுகளுக்குத் தொடர்புடைய இரசீதுகள். (நீங்கள் ஒரு பயனாளர் இல்லையெனில், எங்களுக்கு இவை கண்டிப்பாகத் தேவை.)

MINISTRY OF LAW SINGAPORE | Public Trustee's Office